உ

சிவமயம்.

உரோமரிஷிசூத்திரம்

நூறு.

இஃது
வீரணன்கோட்டம்
மதுரைமுதலியாரால்
பரிசோதித்து
தக்கோலம்
நரசிம்முலு நாயகர்
அவர்களது
விவேகசந்திரோதய அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விய௵-ஆவணி௴.

உ

சிவமயம்.

உரோமரிஷிசூத்திரம்.

காப்பு.

மூலவட்டமானகுருபாதங்காப்பு
முத்திக்குவித்தானமுதலேகாப்பு
மேல்வட்டமானபரப்பிரமங்காப்பு
வேதாந்தங்கடந்துநின்றமெய்யேகாப்பு
காலவட்டந்தங்கிமதியமுர்தப்பாலைக்
கண்டுபசியாற்றிமனக்கசடுநீக்கி
ஞாலவட்டஞ்சித்தாடும்பெரியோர்பாதம்
நம்பினதாலுரோமனென்பேர்நாயன்றானே ()

தானாகமுன்னூரத்தஐந்நூற்றுள்ளே
தவமுமல்பாடிவிட்டேன்யோகமார்க்கந்
தானாகும்வாதத்துக்காதியுப்பைச்
சமுசயங்களில்லாமல்சொல்லிவைத்தேன்
தானாகும்வழலையென்றஉப்பின்வித்தை
தன்னுக்குள்தன்னினத்தைத்தாக்கும்பாரு
தானானகருவுண்டுசுத்தகங்கைச்
சலமதனைமறைத்துவைத்தேன்தன்மையாமே (

பாருநீவழலையென்றஉப்புமூன்றும்
பரிபாஷையில்லையடாகைபாகங்கள்
சேருநீபூதமஞ்சகரணமான [ன்
தீட்சையுடனாகவன்றேய்ச் செய்பிப்போம்வே

காருநீசுத்தகங்கைமறைப்பேதென்றால்
கருவறியுஞ்சித்தருக்காய்ம்மயந்துவிட்டேன்
சேருநீனூர்நாற்றின்னொருவாயாய்ந்து
செப்பிவைத்தஐம்பதுக்குள்தெளிவுபாரே ( )

தெளிவென்றாலதின்சூட்சங்காணப்போமோ
சேகரமாய்ப்பதினாறுசேர்த்தைப்பாரு
குளிவென்னமுன்னூல்தானூறும்பாரு
குளிதெரியுஞ்சூத்திரமோராறுகண்டம்
தெளிவில்லையென்னூற்றுப்பத்திசொன்ன
திகண்டெல்லாம்பின்னொன்றுங்கெவ்வாது
களியினூடபோக்குமீசனுரவியென்றூலதில்
கடாங்காட்டிவைத்தார்குருதேவனாறேதே (௪

கோரமல்பாடிவிட்டார்சிக்கசொல்லாரு
சூத்திரங்களறியவென்றால்குருநாள்வேணும்
வினையப்போகாதுஇதிகபுத்தி
வினையாளர்காண்பதல்லால்மற்றோர்க்கேது
கோணமல்கோணமடாஇந்தநூலில்
கொட்டினெவைத்தியமாம்வாதயோகங்
காணமெனப்பாதேதிளிவாய்ப்பாரு
அகபாகமைந்நூற்றிற்கண்டபே (௫)

கண்டதென்னஉலகத்தில்வயித்தியமையா
கொகண்டபலன்சானூறுஞ்சரிதைமார்க்கம்
விண்டனப்பாநீற்றினத்துக்காதிசிந்து
விட்டுவிட்டால்வயித்தியமும்வினைப்போகும்
தொண்டுபண்ணிகுருவினுடபாதம்போற்றிச்
சொல்லுவாரில்லாட்டாலென்னாற்சொல்லுந்

சண்டையிட்டுப்பேசாதேசிங்கிமார்க்கஞ்
சாற்றினேன்பொதிகைமுனிதயவுதானே (சு)

தயவுவைத்துசொல்லவில்லைலெகுவாய்ச்சொன்
தனையறிந்துகொங்கணவர்சரக்குவைப்பில் [ஞர்
நயமிகுத்துச்சொல்லதுபோல்நிமிளையொன்று
காட்டினார்துருசுக்குச்குருத்தானென்று
சயமவர்க்குநன்றாகநடக்கும்வாக்குச்
சொன்னதிலேகடுங்காரத்தறையொளித்தார்
செயமிகுந்தயோகரிஷிநூற்றிற்சொன்ன
திட்டாந்தங்கருக்கிடையுந்திறம்போதாதே ()

திறம்போதாதேதென்றால்குப்பிக்கேற்றித்
தீயெரிக்கச்சொல்லாமல் தீ நீர் தள்ளிக்
குறம்பாடினாப்போலேமறைத்தாரையா
குருக்குவழிசெய்வதிலேமோசமாகும்
அறந்தழைக்குந்திருமூலர்மூவாயிரத்தில்
அலையடக்கஞ்சிங்கிவித்தையார்க்குந்தோணு
பரம்பரையாய்வந்தசித்தர்யாதம்போற்றிப்
பாடுகிறேன்சிங்கிவித்தையலிக்குந்தானே (அ)

பலிக்கவென்றால்சிங்கிக்குநாதபேதம்
பாடினாரதனாலேஆவதென்ன
கலிக்குநின்றவங்கத்திலிணங்கச்சேர்த்து
கலந்ததினால்சிங்கியென்றபேருமாச்சு
வலிக்கவென்றாலிதின்பெருமைவெகுசாயுண்டு
வாதமுண்டுவயித்தியமுண்டுவழியாடுண்டு
மெலுக்குடையசிங்கியொருபலந்தான்வாங்கி
விருதானகலவத்தில்பொடித்திட்டாயே (கூ)

பொடித்திட்டுப்பீங்கானில்பழச்சாறூற்றிப்
பொடிமணலாய்ரவிமுகத்தில்வைத்துக்கொண்
ஒடித்திட்டகுச்சியினால்கிண்டிகிண்டி [டு
ஓரேழுதினம்ரவியில்வைத்தபோது
குடித்திட்டபொடிகளெல்லாமாடைபோலே
குணமாகக்காட்டுமேட்டாபழச்சாறுவேகந்
தடித்திட்டபழச்சாறுபின்விடும்போது
சார்வாகப்படியளவுதான்தாக்குவாயே (௰)

தாக்குவாய்ரவிசூடுமெத்தவானால்
சாறெல்லாமோரேழுதினத்தில்வற்று
மார்க்கமாம்ரவிமுகங்கண்டால்சாறு
வற்றுமட்டுங்காய்ந்துவெண்மையாகும்யாரு
தீர்க்கமாய்காந்தசிங்கிபலந்தானொன்று
சீனமென்றவெள்ளையொன்றுபூரமொன்று
கார்க்கவேசாரமொன்றுகெவுரியொன்று
கண்டுபாரிதுநாலுங்கழஞ்சிதானே (௰௧)

கழஞ்சானதிவைநாலுஞ்சிங்கியிலேசேரு, கல்வத்
திலிவையைந்தும்பொடித்துக்கொண்டு, விளை
ஞ்சசவுக்காரமொன்று திராவகத்தில், வெள்ளை
யென்றகிளிஞ்சினீறுசங்குச்சுண்ணம், துலாஞ்ச
ல்லோபொடித்திடுவாய்விராகன்ரண்டு, துண்மை
யாய்யொருமொழனக்கொதிக்குந்தண்ணீர்
கிளிஞ்சலல்லோகுருவாச்சுக் கால் படியாந்தண்
ணீர், கெணாதன்தனக்குவிட்டுக்கிளறியாட்டே

ஆட்டுவாய்சேர்த்தசரக்கெல்லாமான
ஐயனேதிராவகந்தான்வேகமெத்த

மூட்டுவாயிருசாமமரைத்துக்கொண்டு
மூசியாமல்மயினபதமாகப்போடு
சேட்டிவாய்கும்பிடுகலண்டத்தோடுங்
கெடிபெற்றசுன்னமய்யாஆகிகொண்டு
மூட்டுவாய்திராவகத்தில்குழைத்துநீயும்
புத்தியுடன்குப்பிக்குள்பூசுபூசே (௰௩)

பூசியேகாயவைத்துமயினமெல்லாம்
புகழானகுப்பியைத்திட்டம்போடு
தேசியெனுமடிகனத்ததாழியொன்றில்
சிறுமணலாயரைவாசிமட்டுங்கொட்டி
வாசியென்றகுப்பியினடுவேவைத்து
வளப்பக்கல்கொண்டுகுப்பிவாயைமூடு
தோஷிகளேயினிமேலுந்தெரிந்திடாதோ [றே
சுருக்கமேனேன்மணித்தாயைத்தொழுதுபோற்

போற்றுவதுமுத்தீயுமூன்றுசாமம்
பொங்காமல்வெடியாமல்பூண்டுபோரு
ஆற்றிவிடுகுப்பிமறுநாளில்தானு
மம்மனேபதங்கமென்றகுருத்தானையா
நீற்றினத்துக்கிதுவாகிதுருசுக்காகி
நீறுட்டால்சுட்டலேந்தகுருட்டுவாகி
சாஸ்திரந்தானென்னசெய்யும்புத்தியில்லாச்
சண்டாளர்பொய்யெனவேதள்ளுவாரோ (௰௪)

தள்ளினதுமவர்வேரில்குற்றமில்லை
சவுக்காரவழலையைத்தான்மறைத்ததாலே
வெள்ளையென்றசிவனுப்பைமறைத்ததாலே
வெடியுப்புகட்டுவதுவிள்ளாதாலே

கொள்ளியென்றபூநீறுபோனதாலே
சூடகிலைசயிற்கல்லும்புகாணுதாலே
துள்ளியென்றசத்தசலதீட்சைமார்க்கஞ்
சொல்லாமற்போனதினால்தோணுதன்றே ( )

தோணுகின்றசித்தர்கள்தான்கூடிக்கொண்டு
சூட்சாதிகாரணத்தாலும்புமார்க்கங்
காணுகின்றபரியாஷைநாமத்தாலுங்
கபடாகமுன்பின்னாபுகளையாலும்
வேணுமென்றேஅவரவர்கள்நூல்கள்தோறும்
விளம்பினார்பூராயமெத்தமெத்த
ஊணுகின்றஉப்பல்லால்வேறொன்றில்லை [ன்றே
ஒளித்ததென்னவழலையொன்றுந்தீட்சையொ

தீட்சையொன்றும்வழலையொன்றுஞ்சூட்சமாக
செப்பினாரதினாலேயுலகவாதி [ச்
மாச்சலுண்டுமனம்புண்ணாய்சாஸ்திரத்தை
மனம்வெறுத்தார்புத்தியண்ணிவருத்தினாக்கா
நீச்சென்றகடுநீச்சுநீஞ்சலாகும் [ல்
செட்டிலேகிரியாதேஅடுத்துப்பாரு
வாச்சதேவழலையென்றஉப்புதானும்
வகையானசருகுதுளிர்மார்க்கந்தானே (௰அ)

தானென்றசிங்கியல்லோகுருத்தானச்சு
தாரணியில்வாதமிந்தக்குருவிலாச்சு
ஏனென்றகுருவாலேவயித்தியந்தா
னிலக்குண்டோஆனாலுமிசைந்துகேளு
கோனென்றதாம்பிரத்தைத்தகடுதட்டி
குருவிலொருபணம்பூசிக்குகைக்குள்மூடி

காணென்றகுக்குடத்தில்நீறிப்போகுங்
　　களிம்புற்றசெம்புநிறங்காட்டொண்ணாதே ()

ஒண்ணாவற்பத்தைத்தேனிற்கொள்ள
　　ஓங்கின்றமேகமெல்லாமொடுங்கிப்போகுங்
கண்ணானசுக்கிலத்தைக்கட்டிக்கொள்ளுங்
　　காயபலமுண்டாகுஞ்சனகம்போலே
வெண்ணையொருகழஞ்சிக்குப்பணந்தான்பற்பம்
　　விரவிநல்தயிலமதைவிளங்கிப்போடும்
புண்ணியமேசெய்தவருக்கிந்நூல்கிட்டும்
　　புசுண்டனுக்குமெந்தனுக்கும்வாதுண்டாச்சே

வாதுவந்ததெகிறாலேயைந்நூற்றுள்ளே
　　மார்க்கமெல்லாம்பாடிவிட்டேன்மனிதர்க்காக
சாதுவென்றதிருமூலரெந்தனாலேத் [ச்
　　தம்முடையகுகைக்குள்ளே மறைத்துப்போ
ஏதுவென்று அதற்கீடாயைம்பதுந்தா [ட்டார்
　　னிகத்திலேசொல்லிவைத்தேனேறுமார்க்கந்
சூதுகொண்டோர்த்திருந்தால்தேயுந்தோயுஞ்
　　சொர்ணமதைச்சுத்திசெய்து தட்டாய்வாங்கே

வாங்கியந்தக்குருவிலொருபணந்தான்பூசி
　　வான்பிரமியிலையாத்துக்கவசங்கட்டிப்
பாங்குடனக்குக்குடத்திற்போட்டாயானால்
　　பசலைநிறம்போகாமல்பற்பமாகுந்
தூங்கியேகிரியாதேகிரிபலாகி
　　சூரணத்திற்கொண்டுவிடுமண்டலந்தான்
காங்கைக்ஷயரோகமத்திமூலச்சூடுங்
　　கிராணிகுன்மம்பீலிகையுங்கடலிற்போமே ()

கடல்சேர்க்கும்வெள்ளியொருகட்டிவாங்கிக்
கனத்தினீராலேசுத்திபண்ணித்
திடமானகுருவிலொருபணந்தான்பூசித்
திருமேனிதன்னையணைத்தாக்கவசங்கட்டிப்
புடமேதுகுக்குடத்தில்நீறிப்போகும்
பூசைதன்னைமறவாதேபுண்ணியந்தா
னுடலெடுத்தால்கர்மவினைக்கிடாகாதே
உறுதிபற்பத்தனுபானமுரைக்கிறேனே (உ௩)

உரைக்கிறேன்சஞ்சீவிலேகியந்தி
னுண்டுவோரமண்டலத்தில்கண்ணோடுஇல்லை
இரைக்கிறேன்குடல்வாதமேற்றமில்லை
யெலும்புருக்கிப்பருப்பிளவையெய்யோதுமி
ரைக்கிறவுரோமமில்லைபித்தமில்லை [ல்லை
நோவில்வருரோகமெந்தகாளுமில்லை
திரைக்கிறதோருடலில்லைமோசமில்லை
சிவசிவாவிதின்பெருமைசெப்பொண்ணாதே (

செப்பவேஅயத்தகடுலேசாய்த்தட்டி
சிறுநீரிலாதல்பழச்சாற்றிலாதல்
துப்புரவாச்செய்துகொண்டுதகட்டின்மேலே
துருசுகுருவானசூட்சந்தன்னை
அப்படியேபணவிடைதானெடுத்துப்பூசி
ஆமணக்கினிலையணைத்தாக்கவசங்கட்டி
உற்பனமாய்குக்குடத்தில்நீறிப்போகு
மோகோகோவிதின்பெருமையுறுதிகாணே ()

உறுதியென்றசீலோகபற்பமண்டலந்தா
னுத்தமனேகரிசாலைலேகியத்தில்

மருகிமதிரெண்டிலுமேகொண்டாயானால்
பாண்டுவொடுமூலமெல்லாம்பறந்துபோச்சு
குருகியென்றதாதுபுஷ்டியூறலாச்சு
குணக்கேடுசெய்கின்றசோகைபோச்சு
சுருகியிந்தப்படியேதான்காந்தஞ்செய்ய
சோகைகாமாலையெல்லாந்தோற்றுப்போச்சே

போச்சென்றுவிடுகாதேகருவங்கத்தைப்
புளிப்பானமோரிலேசுத்திசெய்து
ஆச்சென்றகுருவினிலேபணந்தான்தூக்கி
அருளானவங்கத்துக்கப்பிப்போடு
காச்சென்றகருஞ்சீலையைத்துக்கொண்டு
கவசமிடுகருவங்கங்கட்டிப்போகு
மூச்சொன்றுமோடாதுகுக்குடத்தில்
மூழுவெள்ளையாகுமடாமூர்க்கமென்னே ( )

மூர்க்கமிந்தநீறுமேலேகளங்குசெய்தால்
முன்பின்னுயஞ்சாறுமாற்றுக்காணுஞ்
சேர்க்கையடாமறங்கியடாபட்டைத்தூளில்
தின்றுவாமண்டலத்தில்தீரும்நோய்கேள்
நீர்க்குழியில்புண்ணூறும்வெட்டைதீரும்
நீர்செரிப்புக்காலெரிவுநின்றுபோகும்
ஊர்க்குளுனக்கிடானேயொருவரில்லை
உத்தமனேவங்கத்தினுண்மைதானே (௨௮)

உண்மையிந்தப்படிதானேவெள்வங்கத்தை
உண்டுபண்ணிமண்டலமே கொண்டாயானால்
பண்மையிந்தநீறுமேலேமேகமெல்லாம்
பாக்குமடாஉலகத்தில்பண்டிதந்தான்

தண்மையல்லோவேணுமடாதேகரோகந்
தாதுவழியாதவர்க்குமருந்தேதுக்கு
வண்மையினாற்செய்துநெடுநாள்பழக்கம்
வந்தல்லோவிம்மூன்றும்வாய்க்குந்தானே (

வாய்க்கவேசிறுநாகந்துத்தநாகம்
வாங்கிவந்துகறண்டியினிலுருக்கியேதான்
தாய்க்கவேயிலுப்பைநெய்யில்சுத்தியாச்சு
தகடுஒருவிரல்கனமாய்த்தட்டிக்கொண்டு
சீக்கிரமாயகுருவிலொருபணந்தான்தூக்கிச
சேர்த்துவிநாகத்தின்சிறல்போகும்
பேய்க்குமட்டிக்காயனைத்துகவசங்கட்டிப்
பேசாதேகுக்குடத்தில்பேணிச்செய்யே(௲௰)

செய்யவேநாகபற்பந்தெளிவுமெத்த
திரிகடுகுலேகியத்தில்மண்டலந்தான்கொள்ள
ஐயமில்லைகாசமில்லைமூலத்துள்ளே
ஆணிமுளையில்லையடாமேகத்தாலே
குய்யமதில்பிறந்தபவுத்திரங்கள்புற்று
குன்மமில்லைபித்தமில்லைதாதுபுஷ்டி
தையலரைக்கைவசமாக்கும்பற்பந்
தாரணியில்சொல்லிவிட்டேன்தனதுமாரோ ()

தனதானபூமியிலேஉப்போமெத்த
தன்னிலேமூன்றுஉப்புசவுக்காரந்தான்
மனதானபேய்க்குராங்குவேறென்றெண்ணி
மாளுவார்கினமுடிந்தமார்க்கம்பாரார்
கனமானபொன்னென்றுமணிதிவேறே
கம்மாளன்தான்செய்தகதையைப்போலே

சினமானதேசாதிபாஷையெத்த
செப்புவார்வார்த்தையெல்லாந்திரட்டிஞரோ()

திரட்டிஞருப்புக்குவெகுநாமங்கள்
தேசாதிவழக்கமல்லோசித்தர்சொன்ஞர்
மருட்டிஞரொன்றுசொல்லிஉலகமாடு
மதிமயங்கிப்பலநூலின்வகைதோணுமல்
உருட்டினதேயல்லாமல்நாய்க்குத்தேங்கா
யுடைக்கறியுமோவிதுதானுவமைஐயா
குருட்டுநாயிசலுக்குத்தாவுகின்ற
குணமாச்சுஆனைகண்டகுருடர்தானே (௬௩)

குருடனுக்குப்பால்நிறந்தான்கொக்குபோலே
கொண்டுவந்துகாட்டஅவன்தடவிப்பார்த்து
புருடாட்சிக்குழந்தையித்தைவிழுங்கிஞக்கால்
பிழைக்குமோவென்றுசொன்ன புதுமைபோல
கொருடனுக்குஈப்பறவைகாட்டிஞப்போல் [லுங்
கிஞ்சிதமாம்புத்தியுள்ளோர்வேறுண்டென்பார்
திருடனுக்குத்தோணுதுவழலைமார்க்கந்
திராய்த்தகடுலேசாகச்செய்திட்டாயே (௬௪)

செய்திட்டதகடுதன்னைப்பழங்காடிக்குள்
தீப்பாவக்காச்சியதில்தோய்க்கச்சுத்தி
மெய்திட்டமாய்க்குருவிலொருபணந்தான்தூக்கி
விரவிவிடுதகடுதட்டிமேலுங்கீழுங்
கைதிட்டமாஞ்சிமிலிலொச்சிவேணாக்
கலவத்திலணாத்தெடுத்துகலசஞ்செய்து
வைதிட்டகுக்குடத்தில்யற்பமாகும்
மாநிலத்திலித்தமுறைமகிமைதானே (௬௫)

மகிமையென்றவெண்கலம்பித்தளையிரண்டும்
வாங்கிவந்துலேசாகத்தட்டிக்கொண்டு
மகவறனைப்போல்மழுக்கவெதுப்பித்தேசிப்
பழச்சாற்றில்தோய்த்திடவேசுத்தியாகும்
சகலகுருவானகிலேபணந்தான்தூக்கித்
தட்டிவிடுகஞ்சுகத்தின்தகட்டின்மேலே
குகைமுறையாய்குகைகுடத்தில்போடும்போது
குருநீற்றும்பற்பமென்னகுணந்தான்காணே ( )

குணமானபற்பத்தைத்தேனிற்கொள்ளக்
குன்மம்பிலிகையெல்லாங்குடியோடிப்போம்
கூணநேரமாளுளுமோடுங்காமம்
சன்னதமாங்காதுவிர்த்திதானேயுண்டாம்
பணமானதென்னசெய்யும்பாதாளத்தில்
பாயுமென்றசொல்போலேஇந்தபற்பம்
மணமாகுநரைதிரையுமாறிப்போகும்
வாலைசிவனென்னவேமதிக்கலாமே (௩௭)

மதிக்கலாமப்பிரோகம்நிமிளைரண்டு
மகிமைமெத்தமகிமைமெத்தவுபாசகத்தில்
துதிக்கலாங்கோசலத்தில்சுத்திசெய்து
சுருதிபெற்றகுருவிலொருபணந்தான்தூக்கி
விதிக்கலாமிருபுறமுந்தடவிக்கொண்டு
வெண்குன்றிமணிவேளைக்கவசங்கட்டிக்
கதிக்கவேகுக்குடமாய்ப்போட்டபோது
கனமானபற்பமிதுகண்டுகொள்ளே (௩௮)

கொள்ளடாஅமுதாதிலேகியத்தில்
கொண்டுவாமண்டலத்தில்தீரும்நோய்கேள்

கள்ளடா யோலிருக்குமஞ்சள் கழிச்சல்
காந்தல்பரதாபநீரிழிவுதீரும்
விள்ளடாபோகாதுநீர்ச்சிறுத்து
மேலேறுஞ்சூலைமுதல்வீக்கந்தீருந்
தள்ளடாபெண்மாய்கைமூன்றுதிங்கள்
சதித்துவிடுதேகமென்னசவுக்கியமாமே (௩௯)

ஆகுமேசூதமொருபலந்தான்வாங்கி
அரைத்துவிடுசெங்கல்தூள்மஞ்சள்தூளில்
போகுமேயெலிகாரன்செந்தீயியம்
போக்கிவிட்டாலதுதானேபிலத்தசுத்தி
யேகுமேசூதம்பீங்கானிலிட்டே
யெடுத்தகுருவதிலொருவனந்தான்போடு
வேகுமேகிறுகிறுத்துப்பொங்கிமிக்க
விரைந்துவிடுஞ்சூதபற்பம்வியாதிக்காமே ()

வியாதிபோம்வழுக்கிரசதாளிதன்னில்
விருதானபற்பமதைமண்டலந்தான்
பயாதியுடன்குணம்பார்த்துக்கொண்டாயானல்
பறக்குமேமேகமிருபதுந்தானப்பா
சுயாதிகுணம்வாயில்வந்துகட்டிறைக்கால்
தூற்றிவிட்டதலைவேருகொப்பளிப்பாய
துயாநீயேயென்றுசெக முன்னே வாழ்த்தஞ்
சாதிலிங்கபற்பத்தைச்சாற்றுவேனே (௪௰)

சாற்றுவேன்சாதிலிங்கமழஞ்சுகாறு
தனிசுரசங்கொழுந்தகலசாறுவாங்கி
ஊற்றிவிடுகலசமதிலிங்கந்தன்னை
உச்சிதமாய்த்தோளாந்திரமாகத்தூக்கிப்

பார்த்திருக்கத்தீயெரிப்பாய்சாறுவார்த்து
பதங்கண்டு இறக்கிவிடுசுத்தியாச்சு
தீர்த்துவிடுகுருவிலொருபணந்தானேயா
சிறுநெரிஞ்சிக்கவசமிட்டுப் புடஞ்செய்வாயே

வாய்கொள்ளப்பேசினால்வருமோவாதம்
வாசிதனைச்சிலவழித்தால்வருமோயோகங்
காயில்லாப்பழமாமோவேதமார்க்கங்
காலடக்கமில்லாட்டால்ஞானமாமோ
தாயில்லாப்பிள்ளையுண்டோஉலகவாசந்
தழுவுகின்றகுறியோலேசமாகிகாணும்
பேயனுக்குச்சொன்னதிலேலொன்றுமில்லே
பிடரிவழிமார்க்கத்தைப்பேசொண்ணாதே ()

பேசினதுமுன்னுரைத்தலூர்நூறுள்ளே
பேசிவைத்தேனதிலேமறைத்தார்சித்தர்
காசினியில்சட்டைமுனிதீட்சைக்குள்ளே
கறுப்பில்லாமல்வெளிகாணச்சொன்னார்
மோசமென்றுதிருமூலர்கிழித்துப்போட்டார்
மூலகுருவர்க்கமெல்லாமோசக்காரர்
பாஷையினால்பாடிவைத்தார்நூல்கள்தோறும்
பற்றியின்றுபார்த்தாலும்பணிரண்டாண்டே ()

ஆண்டுபணிரண்டுக்கும்வேறேசித்த
மாகாமல்சேகரித்துப்பலநூலெல்லாம்
ஆண்டிருந்துபார்த்தாக்கால்குருத்தானாகிப்
புத்தியெனுமறிவதிலேயெய்தும்
தூண்டிவதுசொர்க்கபதமடைந்தாப்போலே
சுருக்கிலேயிதுதோற்றுந்தோற்றுமய்யா

மாண்டகிலுல்பலனென்னஞானமென்ன
மரணமடைந்தாய்போலேமனிதர்வாழ்வே ()

மனிதரெல்லாமரணமடைந்தார்களென்று
மனதிரங்கிஐந்நூற்றில்வழியாய்ச்சொன்னேன்
சனியனைப்போல்சித்தரெல்லாங்கூடிக்கொண்டு
சமாதிக்குளடக்கிவிட்டார்சட்டைநாதர்
கனிவுவந்துசொன்னதையுங்கிழித்தாரையோ
கண்ராவிகண்ராவியென்னசொல்வேன்
அனீதமாய்ப்போகுதையோமனிதர்வாழ்க்கை
ஆனாலும்புத்தியில்லைசண்டாளர்க்கே (௬௬)

சண்டாளாபெரியோரை அடுத்துக்காரு
சாஸ்திரத்தில்விநயம்வைத்துத்தாக்கிப்பாரு
பெண்டாட்டிபிள்ளையுடகழுத்தைக்கட்டிப் [ல்
பிதற்றுகிறாய்போனவுயிர்கொடுப்பாளோசொ
திண்டாட்டம்பண்ணாதேயுனக்கேபுண்ணியஞ்
சேரட்டாலேயினுள்ளே சாரைப்பாம்பைக்
கண்டாக்கால்சந்திரனுமொடுக்கமாவான்
கவசமிட்டச்சாகிலிங்கப்பற்பமாசசே (௬௭)

ஆச்சப்பாலிங்கபற்பஞ்சூடுமெத்த
ஆவின்பால்சருக்கரையாற்சேர்த்துக்கொண்டு
தோச்சுண்ணமண்டலத்தில்மேகவெட்டை
சூலையொடுசன்னியெழுதோஷந்தீரும்
தீச்செயாமல்வாண்டுமூலத்துள்ளே
சிக்கிகின்றவாயுவெல்லாந்தீருந்தீரும்
காச்சல்குளிரினமாறல்கண்டமாலை
கன்னத்தில்சூலைமுதல்கடந்துபோமே (௬௮)

கடந்துபோமிக்குருவில்வீரம்பூரங்
    கானகத்துப்புழுகோடுசேருமாகில்
தொடர்ந்துபோஞ்சரக்கெல்லாமணிபோலாடுஞ்
    சுகமானஉபரசங்களியமாகும்
படர்ந்துமணிகளங்காகுஞ்செந்தூரித்துப்
    பாச்சிறல்வேதையென்றபரிசுமாகும்
யிடந்தானேசிங்கிநவலோகத்துக்கு
    வீரனென்றுசித்தரெல்லாம்விளம்பினாரே ()
விளம்பினேஞ்சிங்கியினாற்செந்தூரபற்பம்
    வேணபடிசெய்துகொண்டுஉலகத்துள்ளே
பழம்பிணிகள்கொண்டவர்க்கேமருந்தையீந்து
    பரிகாரஞ்செய்துவரப்பாவம்போசசு
தளம்பியல்லோகிரியாதேஷியாழகற்நங்
    தயிலகுரணகிருகஞ்சகலத்துக்கும்
உளம்பிலககவிக்குருவில்காணிசேரில்
    உசிதமடாதுருசுகுருஉரைக்கிறேனே (௫௰)

துருசுகுரு.

உரைத்தவகையேதென்றால்குருத்தானென்று
    உயர்ந்திட்டவீரமொன்றுபூரமொன்று
துரைத்தனத்தார்பூசுகின்றபுழுகதொன்று
    சுருக்காகமத்தித்துதுருசுகப்பி
யெரித்துவிடுஅண்டத்தின்சுண்ணத்துள்ளே
    என்மகனேகொடுஞ்சுண்ணமிதுக்குப்பாகி
விரித்தசுண்ணஞ்செய்ததுபோல்சவுக்காரத்தை
    மிளகளவண்டத்துடன்கூட்டியாட்டே (௫௧)
ஆட்டிவிடுஅண்டநீர்த்தெளிவினாலே
    அரைத்தட்டிசுண்ணக்கிலெரிக்கவாங்க

ஊட்டிலென்னபலியாதோவுற்றுப்பார்த்தால்
• பலிக்குமையாஅக்குருக்கானயட்டபோதே
ஊட்டிவிக்கும்ரசமிதிலேகட்டிப்போச்சு
ஒருமாற்றுகிலும்நிசமாய்க்காணலாச்சு
வீட்டிலிருந்தாயிழைகைக்கொஞ்சிக்கொஞ்சி
விளையாடவோவுனைத்தேன்விளக்குமாறே ()

மாறடாதுருகுருச்சவுக்காரத்தை
வளமானகெந்திக்குப்பூசிப்பூது
நீறடாசுண்ணும்பாமிந்தச்சுண்ணம்
நேரானசூதத்தைமணிபோலாட்டுங்
கூறடாயிம்மணிக்குப்பாறையுப்பைக்
கொண்டுவந்துகவசமிடுபுடந்தான்மத்து
திறடாசவ்வாதுகாரமிட்டுச்
சேர்த்துருக்கமணியென்னசிவத்தின்கூறே ()

சிவத்துடனேதங்கமொன்றுநாகமொன்று
சேர்த்துருக்கிச்செந்தூரஞ்செய்காலையா
அவத்தமில்லைகாவிக்குநிலைக்குஞ்செம்பொன்
அலையாதேசாண்வயிறுஅகலமோடா
குவித்திருக்கவேணுமோமலைபோல்தங்கம்
கொண்டமனையாட்டியர்க்கோகூத்தியார்க்கோ
தவத்தைஅனுசரிப்பவர்க்குச்சொன்னவாதந்
தலைதெறித்துப்போகாதோசாரத்தாட்டே ()

சாரத்தில்குருப்பூசிப்பூதவூது
தந்தம்போல்கட்டுமடாசிவுத்தின்சுண்ணம்
வீரத்திலேற்றினுல்மெழுகாய்ப்போகும்
வேதைசொல்லவேணுமோவிருதாமாடே

தூரத்திலலையாதே அடுத்துப்பாரு
சுனையான வெடியுப்புசுண்ணஞ் சுண்ணங்
காரத்தைக்கண்டாலுமாங்காரந்தான்
கட்டுமடாவில்லாட்டால்கடினந்தானே (௫௫)

கடினமென்றுதள்ளாதே தருசுசுண்ணங்
கண்டதினால்சித்தரெல்லாஞ் சொல்லிவைத்தார்
படினமதுக்கேதென்றால்வழலையாதி
பண்ணூட்டால்சிங்கியிலேயவிக்குஞ்சுண்ணந்
துடிமிகுத்தகண்டதினால்சூதாசன்
தூடியடங்கியுன்னிடமாயத்தொண்டுசெய்வான்
அடியிருக்கும்முடிக்குப்பேரோதென்றால்
அறைகிறேன்சகருக்கைமெல்லவறிந்திடாயே ()

அறிந்துகொண்டுவழலைசவுக்காரஞ்செய்யில்
அடிமுடியைத்தடியடியாயனந்தஞ்செய்தார்
விரிந்ததையா அதினாலேவண்ணஞ் சீலே
வெளுப்பதற்குச்செய்தாரோ கேள்வியுண்டோ
தெரிந்துமுன்னாள்பாங்குசெய்யும்போதிலேதான்
சிற்றறிவால்மயங்கிவிட்டார்திறம்யோதாது
எறிந்துவிட்டார்சித்தரெல்லாம்பேசிக்கொண்டு
.ஈசனுப்பைநந்திமுன்னளியம்பினாரோ (௫எ)

இயம்புகின்றவகையேது ஆதியுப்பு
ஈசனுப்பாபுண்டுமென்னஒன்றேயாச்சு
சுயம்புலிங்கமென்றுபேர் ஆன்மியென்றுஞ்
சுசாதிகப்படிகரவிச்சுடர்தானென்றும்
சயம்பிலக்குங்ககனாரவிந்தமென்றும்
ஞானநிஷ்டிக்காரர்சொல்வாரானுப்பென்றும்

பயம்பிடிக்கச்சொன்னதல்லால்வேறென்றில்லை
பற்றிப்பாரவர்க்குடுக்கப்பளிங்குதானே (௫௯)

பளிங்கென்னசிவரூபமுடிதானாச்சு
பராபரையாள்ரூபமல்லோசிலப்புமாச்சு
விளங்கியல்லோசொல்லுகிறேன்நிலவானுப்பு
வேதனுப்புநடுவாச்சுவேறேயில்லை
முளங்கியல்லோநூறொன்றுகவர்கள்கோடி
மூடர்களேஒன்றல்லோமூன்றுமாச்சு
உளங்கருக்காய்ச்சொல்லுகிறேன்சத்தியுப்பை
உவமொன்றுமின்றென்றும்ரவிதானென்றே ( )

ரவியென்றுங்காலென்றுமுத்தமென்றும்
ராசியென்றும்பூமியுடநாதமென்றும்
புவியென்றும்பூவென்றும்யோகியென்றும்
புல்லென்றும்பொலிந்தமணற்பொடிதானென்
குவியென்றுந்தாயென்றுவந்தாளென்றுங் [றுங்
குருவியென்றுஞ்சுட்டக்கல்கூத்தனென்றுங்
தவியென்றுமுப்பென்றுங்காரமென்றுஞ்
சத்தியென்றும்வளையலென்றுஞ்சாற்றுவாரே

சாற்றுவார்வழலையென்றும்வண்ணானென்றுஞ்
சவுக்காரந்தானென்றுஞ்சாரமென்றும்
பூத்தமலர்சுரோணிதமாம்புஷ்டியென்றும்
புலம்பத்தாவிடமென்றும்பூநீறென்றும்
கார்த்திகையில்மேகசலவித்தென்றுங்
கருவென்றும்பங்குனிக்கதிர்தானென்றும்
நீற்றினத்துக்காதியென்றுமண்டமென்றும்
[illegible]பேரே (௬௧)

அடிதானேநடுவுக்குமாதியாகி
ஆகாசபிரமகெற்பத்தமூர்த்தமென்றுங்
கடிதானபச்சையென்றும்நீலமென்றுங்
கல்லென்றுங்கானலென்றுங்கம்பியென்றும்
வெடியோசைக்காரியென்றும்வில்தானென்றும்
மேகமென்றுஞ்சுண்ணமென்றும்விஷ்ணுவென் [றும்
குடியானவிடமென்றுங்குசத்தியென்றுங்
கூளாயில்லாச்சுவமொன்றுங்கூறுவாரே (௬௨)

கூறுவார்கூர்மையென்றுமிணங்கியென்றுங்
கூச்சமற்றபேரெல்லாம்நடத்தானுச்சு
வேறுவிதமொன்றுமில்லைசாத்திரங்கள்
மெய்யாகப்பாடிவைத்தார்வீண்தானல்ல
ஏறுதற்குத்திட்சையொன்றைமறைத்துப்போட் [டார்
இதினாலேசவுக்காரமெளிதாய்ப்போச்சு
நாறுகின்றமண்ணுடனேநீருஞ்சேர்ந்தால்
நாமென்னசொல்லுவதுநாட்டிள்ளோரே ()

உள்ளமென்றுமனந்தானேஅறிவதாச்சு
ஓகோகோவுங்கள்மனங்கெடுதலாச்சு
கள்ளமனம்போவதெப்போமண்ணுந்தண்ணீர்
காண்பதெப்போகண்டாலுங்கங்கைதிட்சை
வெள்ளமென்றபாலருந்தியேறலெப்போ
மேலானகுருபாதஞ்சேர்வதெப்போ
பிள்ளைகளேயுங்கள்புத்திமூடத்தாலே
பிழைக்கறியீர்நான்சும்மாயுலம்பினேனே ()

புலம்பிவிட்டேனென்றுசொல்லி யுலகத்தோர்க
புத்தியறிந்தவர்போலேயாரியக்கள் ளே

குலம்புழுக்கைப்பயல்களெல்லாங் கூடிக்கொண்
டு,குருவுனாத்தசாத்திரங்கள்பொய்யென்பார்கள்
சிலம்புபோலிருக்குமென்தாய்சொன்னவித்தை
தேவடியாள்மக்களுக்குச்சித்தியாமோ
தலம்பிலக்கவந்தடுத்தமகனேயுந்தன்
தனக்காகச்சொல்லுகிறேன்கங்கைதானே ()

கங்கைநதியாடினால்வினைபோமென்றுங்
காசினியோர்சொல்லுவதுகேட்டிலாயோ
அங்கல்லோதீட்சைவிதிக்கந்தரங்கம்
அடையாளமேதென்றால்பிண்டம்பிண்டம்
வங்கணமாமண்டபிண்டஞ்சேர்ந்தபோதே
மண்ணல்லோபொன்னாச்சுமற்றுமுண்டோ
உங்கள்கையில்கருமுடித்துக்கொடுத்திருக்க
வுங்கள்புத்திவழிகெடுகவுளம்பப்போச்சே ()

போச்சென்றுவிடுகாதேகுருசுண்ணம்
புகழானசிவயோகதீட்சைக்குள்ளே
ஆச்சென்றுதிருமூலர்சொல்லிவைத்தார்
அந்தமுறைப்படிகாரமேற்றிக்கொள்ளு
நீச்சென்றகுருசுவித்தைகடுதீச்சையா
நெறியானசித்தர்களும்மிகழ்ந்தப்போகா
மூச்சென்றகாரத்தின்முடிதான்காணேன்
முடித்தவிடங்கண்டவரோமூர்த்தியாமே (கூஎ)

மூர்த்தியாஞ்சாரத்தைக்கட்டும்பூர
மோசமில்லேசாரத்தால்குருசுண்ணங்
கீர்த்தியென்னகுருசாலேசொர்ணமாச்சு
[illegible]கைக்குள்ளாச்

வார்த்தையினால்பகட்டுவதேதுக்காச்சு
மனங்குவித்துழைத்தாக்கால் வாராதுண்டோ
கார்த்திகையாற்சுனன்புதைத்த புதையலெல்லா
ங்,கம்மாளனெடுத்தடித்தகண்ணாடிதானே ()

கண்ணாடிசிலமுடித்தானப்பினாலே
கருவதனையறியாமல்மாண்டுபோனான்
விண்ணாடிப்பாராதகுற்றங்குற்றம்
வெறுமண்ணாய்ப்போச்சுதவன் வித்தையெல்
ஓண்ணனமவுனமென்றயோகம்விட்டால் [லாம்
ஒருபோதுஞ்சித்தியில்லைவாதந்தானும்
யெண்ணார்தன்னாசைதன்னைவிட்டுவந்தால்
யேரின்பமுத்திவழிபேசுவேனே (சுகூ)

பேசுவேனிடகலையேசந்திரகாந்தம்
பின்கலைதானாதித்தனாகியாசசு
நேசமதாய்நடுவிருந்தசுடர்தானீங்கி
நீங்காமலொன்றானதுதான்முத்தி
காதலாய்ப்பார்த்தோர்க்குஇதுதான்மோட்சங்
காணாதவோர்க்கென்னகாமதேகஞ்
சோதனையாயிடகலையிலேறவாங்கி
சுழிமுனையில்கும்பித்துச்சொக்குவீரே (எ0)

சொக்குவீரிரேசகஞ்செய்யவேதான்
சூரியனுஞ்சந்திரனுமொன்றாய்ப்போகும்
அக்கினியால்மதியமுர்தங்கக்குங்கக்கும்
அப்பனேநோய்களெல்லாம்வெந்துபோச்சு
மக்குலத்தில்தேகமங்கேசித்தியாச்சு
மதினறயன்[illegible]

முக்கியமாயிதுவெல்லாமடக்கியாட்டு
மூலத்தபதினாறிதழில்வாங்குவாங்கே (௭௧)

வாங்கியந்தப்பன்னிரண்டினுள்ளேசேசி
வன்னிநின்றவிடமல்லோ சூரியன் வாழ்க்கை
யோங்கியிந்தரண்டிட்மு மயிந்தோனையோகி
உற்றபரமடிதானேபதினாறுகுந்
தாங்கிநின்றகாலடிதான்பன்னிரண்டு
சார்வானபதினாறில்மெள்ளவாங்கி
யெங்கினைதைப்பன்னிரண்டில்நிறுத்தியூது
எழுந்தபுரியட்டமடங்கிற்றுப்பாரே (௭௨)

பாரையாகுகிரைமட்டம்யாச்சல்போச்சு
மரப்பிலேவிடுகாதேசுத்தந்தன்னை
நேரையாரண்டிதழினடுவேவைத்து
நிறைந்தசதாசிவனைத்தியானம்பண்ணு
கூரையாவங்குலந்தானுஞ்சென்றால்
குழிக்குள்ளேதானடங்கிக்கொண்டதையா
ஆரையாவுனக்கிங்கசொல்லப்போறேன்
அருமையுள்ளவென்மகனென்றழைக்கலாமே

அழைப்பதுவுநல்லபிள்ளையானால்நன்று
ஆகாதசீஷர்களைச்சேர்த்தால்தோஷம்
பிழைப்பதற்குவழிசொன்னால் பார்க்கமாட்டான்
பெண்டாட்டிமனங்குளிரப்பேசுமாடு
உழைப்பதற்குச்சென்னமெடுத்தானேயல்லா
லுதவிதனக்கெவ்வளவுமுண்டோயில்லை
இளப்பமிவன்பேச்சையடிக்கடிதானும்
பேணக்கச்சொல்லுகிறேனினிமேல்தானே ( )

மேலென்னவிருக்கையிலும்நடக்கும்போதும்
வேறுவாயால்சாரங்கள்விடாமலேற்று
நாலென்னவெட்டென்னவெல்லாமொன்று
நவமானஅட்டாங்கமப்பியாசித்துக்
காலென்னபிராணாயமுன்னேசெய்யில்
சணக்காகப்பூரகமாங்கும்பகமோநாலு
கோலென்னரேசகந்தானொன்றுமூன்று
குறையாமற்சரபீசங்கூட்டித்தீரே (௭௫)

கூட்டியேயழுகினபின்சரபீசத்தில்
குறையாமல்சாதித்தால்பிரமாந்திரங்
காட்டிவிக்கும்லலாடவிழிக்குறியினாலே
கண்மூக்குமத்தியிலேகண்டுபொரு
மூட்டிவிக்குமாதாரமாறுந்தானே
மூலவட்டக்கணபதிநான்முகத்தோன்மாயன்
தாட்டிகமணிப்பூரங்கையன்வட்டந்
தனலானருத்திரனுந்தணலுமாமே (௭௬)

தனலாகும்விசுத்தியறுகோணவட்டஞ்
சதாசிவனார்வட்டமல்லோகுருபீடந்தான்
மனையானபதியினிலேகுறித்துப்பார்க்க
மகியமூர்தலகரிகொண்டுதூங்குந்தூங்குங்
கனலேறிக்கொண்டிருந்தாலெல்லாமுண்டு
காற்றைவெளிவிட்டாக்கால்கருமத்தீதான்
புனலூறும்வழிப்பாதையிந்தமார்க்கம்
பொல்லாததுரோகிக்குப்பொய்யாமென்றே ()

பொய்யாதுசிங்கியிலேகாரச்சுண்ணம்
போட்டால்துருசுகுரு பொய்யாய்ப்போச்சு

எய்யாமற்சிங்கிக்குக்காரமேற்றி
யெறியாட்டால்நவலோகத்தேறிடாது
கையாரக்கண்டதிந்தவித்தைபோலக்
காட்டுகிறேனுன்மனதில்சலவைவேண்டாம்
வையாதேயென்மகனேயுனக்குப்புண்ணிய
மாமுனிவர்சாபம்வருவழியிதாமே (எஅ)

வழியுண்டெல்லாலனையாறுக்குள்ளே
வாகாகவிந்தஉப்புசம்பியாச்சு
சுழியானவெடியுப்புவேகமெத்த
சுத்தசலதீட்சைவிட்டாலொன்றுமில்லை
பழியாகச்சாகுதடாநாதம்வற்றிப்
பாழானஉடம்பிரண்டுமுயிருமொன்றாய்
கழியாக்குங்கும்பிடுதல்கண்ணீராலே
கட்டுமடாமுப்பூவுங்கட்டுந்தானே (எகூ)

கட்டுகிறோமென்றுசொலவிச்சிறிதுபேர்கள்
கண்மூக்குங்கிழிலொழுக்கைவைத்து
பட்டினியேதானிருந்துசாமநேரம்
பார்க்கின்றபோதுபளிச்சென்றுமின்னி
முட்டுமடாபசிக்கொடுமையாலேதீத்தான்
முழிமுழிப்பார்நயனஞ்சிவந்துபோகச்
சுட்டிகளேயிதினாலேயாவதுண்டோ
சோமப்பாலுண்டோமென்றுசொல்லுவாரோ(

வாருணமதியமூர்தம்பீரிட்டோடி
வருமென்றுசிறிதுஜனமாண்டாரையோ
நீரோதுநீர்குடிக்கவாறங்கேது
நினைவுகெட்டதோஷிகளேயிருக்கிப்பார்க்கக்

கூ. முன்சந்திரனிறைமேலமிச்சங்
குடிக்கிறதும்பிடிக்கிறதுமதுதானையா
சிரானமேல்வாசல்தமருக்குள்ளே
சிங்குவைநாலங்குலமுஞ்செலுத்திடாயே ()

செலுத்துவதுஉண்ணாக்குதண்ணாக்கையா
சென்றேறிப்பிடரிவழித்தியானந்தோணும்
வலுத்ததடாநாலுமுனக்கமுதமாச்சு
மவுனமென்றநிருவிகற்பவாழ்க்கையாச்சு
சொலித்திருக்கும்பன்னிரண்டிலிருந்தியூது
சோடசமாஞ்சந்திரகலைதேய்ந்துபோச்சு
பலித்துதடாயோகசித்திஞானசித்தி
பருவமாய்நாடிவைத்துப்பழக்கம்பண்ணே ()

பழக்கஞ்செய்நாள்தனிலேநோயவாராமல்
பாடிவைத்தேனிந்நூலிற்பற்பமெல்லாம்
விளக்கமல்லோகொண்டேறித்திடத்தில்நில்லு
வீணசைகொள்ளாதேபெண்கள்மேலே
வழக்கமல்லோயசிதாகம்பிராணதாகம்
வஞ்சகக்கூற்றிதனிலேமயங்கவேண்டாம்
பிளக்குமடாஉன்சிரசுவெடியாவிட்டால்
பிணியாளனாயிருப்பாய்பேணிப்பாரே (அகூ)

பேணிக்கொள்ளாமல்வெகுபேர்கள்தானும்
பேதைமையினால்மயங்கிப்பிரண்டுபோனார்
காணிக்கொத்ததினாலேகோடிக்காச்சு
கலைகுறையினாள்குறையுங்கருத்தோனதோ
வீணுக்கோசொல்லுகிறேனிந்தயோக
மிஞ்சாதேகுறையாதேவிட்டிடாதே

தோணிக்கொள்ளாதோடாபுத்திமானே
    தொட்டல்லோகாட்டுகிறேந்தச்சுருக்கினாலே   ()

நாலிலேநங்கிசொன்னார்முன்னூறுக்குள்
    நுண்மையாய்க்கொங்கணவனாந்நூறுக்குள்
மாலிமையாய்சொல்லிவைத்தார் யோகிகைநாய
    வளமான ஆயிரத்திருநூறுக்குள்   [ன்
பாலிலேநெய்பிரிந்தாற்போலேஐயோ
    பாடிவைத்தார்சித்தரெல்லாம்பாருபாரு
நாலிலேதிருமூலர்பதினாறுக்குள்
    ஞானமுண்டுகோலாங்கிசவின்றிட்டாரோ (அரு)

கவிலாமலிருக்கவில்லைசூத்திரங்கள்
    நாதாக்கள்பாடிவைத்தார்மறைப்புமெத்த
புலியாளர்க்கைந்நூறுசொன்னேனத்தைப்
    புதைத்தாரோதிருமூலர்பொருமலாலே
தவியாமல்சட்டைமுனிசொன்னதீட்சை
    சாங்கமாய்க்கோள்சொல்லிக்கிழித்தாரையோ
குவியாமல்பலபலவாயோகமார்க்கங்
    கொட்டினார்மவுனத்தைக்குறைத்திட்டாரோ ()

குறைத்தாரோயென்றுசொல்லி மயங்கவேண்டா
    கூர்ந்துபாரோதேனுங்கூடிக்கொள்ளும்   [ங்
இறைத்தாரைக்காராதயிருமுண்டோ
    வென்றுசொன்னார்மச்சமுனியிருநூறுக்குள்
சிரித்தாரோமூலதருஆஆவென்று
    திட்டக்தான்பேச்சருமைசெய்துநன்றே
யுரைத்தாரொன்றநிசயித்தாரானதாலே
    வுங்களுக்குச்சொன்னதிந்தஉகமைதானே ()

உகமையென்ன வொன்றுமில்லை வழலைக்காதி
உவராதி உப்பாதி உண்மையாக்கும்
வகையாதற்கேதென்றால் திட்சையாதி
வாய்திறந்து சொல்லிவிட்டே னுள்ளே தீப்[ப்
பகைமைபண்ணிக் கொள்ளாதே உலகத்தோரை
பழியாதே வியாசரிஷி பண்ணுங்கூத்து
சகமுழுதும் நீயல்லால் வேறேயுண்டோ
தம்பியுந்தன் குண்டியும் வாய்தன்னை மூடே ()

மூடாமல் சிறிது சனமூகபட்டம் பண்ணி
முழுதுமவன் வந்ததுபோல் பிரசங்கித்து
விட்டேதுஉடலேது யோகமேது
வீண்பேச்சாச் சொல்லியல்லோ மாண்டுபோ
காட்டேறிமலைப் பேயிருடிகளாடிக்   [னார்
காய்கிழங்கு சருகு தின்றுங் காமத்தியால்
சூட்டேறிமாண்டவர்கள் கோடா கோடி
சொரூபமுத்தி பெற்றவர்கள் சுருக்கமாச்சே ()

சொருபமுத்திக் கடையாளமேதென்றக்கால்
சுடர்போலே காணுமடா ஸ்தூலதேகம்
அருபமுத்தியிடமல்லோ பிரமஞானி
மயோட்சமென்று சொல்லுஞ்சிரவணந்தான்
பருப்பதத்தை அசைப்பனெனச் சிற்றெறும்பின்
பழங்கதைபோலாச்சு திந்தயோகம் விட்டால்
வெறுங்கட்டத்திலிப் புகுந்தவாறு போலே
வேதாந்த மறியாத மிலேச்சர்தானே   (கூ0)

மிலேச்சனென்று சொன்னமொழி யேதென்றக்
விபரீதபுத்தியிலை விண்ணைப்பார்க்க   போல்

மலைச்சல்லோ போனார்கள் வேறென்றெண்ணி
வாய்ப்பிலுக்காய் நூல்படித்து மாண்பரெல்லாங்
குலைச்சதல்லால் நிருவிகற்பங் காணாரையோ
குருக்களென்பார் சாராயக்கோஷ்டியாலே
பலிச்சதில்லை ஞானநோக்கிப்பார்க்கும் வித்தை
பண்பெல்லாமைந் நூற்றிற்பாடினேனே (௬௧)

பாடுகிறேன் மணிமொழியாம் நாக்கின்கீழே
யலநரம்புபிடித்திருக்குங் கேளுகேளு
கூடுபற்றிச் கூடியேயிழுத்தாற்போலக்
குணமிலாக்கூற்றுவனின்றன்யாரு
நாடுகின்ற நருவியினலறுக்கும்போது
நாக்குநரம்பற்றுமணி குறுகிப்போகும்
பாடுபட்டுண்ணாக்குறுணிதடித்துப்போனால்
பரியாசமாச்சுதிந்தயோகம்பாரே (௬௨)

யோகமில்லான் ஞானமென்னவீண் வீணையா
ஊடுருவிப்பாயாட்டாலென்னசொல்வேன்
நாகமல்லோ சந்திரனைக்கவ்விறுப்போல்
நான்முகன்றன்சூட்சமெல்லாம் நாவிலாச்சு
சாகவல்லோ படைத்தவிதிதன்னைத்தாண்டச்
சட்டைமுனிகரிசாலைச்சாறேயென்றார்
சோகமதுபோகாதுநெடுநாள்செல்லுஞ்
சூட்சமுண்டுமெலகுவாகச்சொல்கிறேனே ()

சொல்லவென்றாலெனக்குப்பின்கூடாதையா
சொல்லவென்றால் சொல்லுகிறேன் சூட்சமாக
வெல்லவென்றால் காணகத்தில் கடலாமூலி
வெகுசுருக்குத்தோத்திரத்தில் பிசினியுண்டு

செல்லடாபின்புரண்டுகற்பந்தானுஞ்
 செப்பரிதுமூலமொண்ணூயிரத்தில்பாரு
அல்லவடாரோமரிஷியென்றுலுந்தான்
 அடுத்தவர்க்குரகசியமாயருளுவோமே (௬௩)

ஓமென்றகெட்டபுத்திமாணுக்காளே
 உலகத்தில்மானிடர்க்கு ஆண்டுநூறு
ஆமென்று இருபத்தோராயிரத்து
 அறுநூறுசுவாசமல்லோ ஒருநாளைக்குப்
போமென்றுபோனதினுல்நாள்குறைந்து
 போச்சுதுபோகாவிட்டால்போறதில்லை
தாமொன்றுநினைக்கையிலேதெய்வமொன்று,
 தானினைந்ததன்மையல்லோவிதிகள்தானே ()

விதியல்லோமதியாச்சுவேறேயுண்டோ
 வேதாந்தப்பொருளறிந்தமெய்யுள்ளோரே
சதியல்லோபண்ணிநீர்விதியைத்தாண்டத்
 தள்ளாமலுள்ளூறைந்துசாருறீர்கள்
நிதியல்லோசவுக்காரச்சுண்ணஞ்சுண்ணம்
 நேராமல்போகுதடாசிஷீகளத்தின்
பதியல்லோசெதியாகும்மோட்சமாகும்
 பரலோகஞ்சாதகமாம்படைத்தவாறே (௬௫)

படைத்திட்டசவுக்காரத்தெண்ணைவாங்கி
 வாடிஞர்சித்தரெல்லாம்பாஷையாலே
உடைத்தல்லோசொல்லுகிறேன்கருமானத்தை
 ஊ ஆ ஓ வென்றெழுத்துகங்கையாச்சு
மடைத்தனமாய்த்திரியாதே அதுதானுந்தம்
 வாங்கியல்லோசவுக்காரவழலைதோய்த்துப்

புடத்திலிட்டுயெரித்துவிட சுண்ணும்யாகிப்
பொன்மேருமாற்றுச் சுபுத்திபாரே (௯௭)
புத்தியுடன்பூர உப்புசொல்லக்கேளு
பூநீறுபலமொன்றுபூரமொன்று
சுத்திபண்ணிப்பூநீற்றைக்கல்வத்திட்டு
துடியானபூரமதைக்கூடச்சேர்த்து
வெற்றிபெறகும்பிடுசல்சுண்ணநீருல்
விரவியொருபீங்கானிலடைத்துக்கொண்டு
சத்தியம்போல்சீலமண்ணேமூன்செய்து
தனிப்புடமாயரண்டுபூழக்தாவுசெய்யே ( )
தாவுள்ளமுழிதனிலேபீங்கானிட்டுச்
சருகுசுட்டசுண்ணும்பையதின்மேல்கொட்டி
காவலிட்டுக்குழிமூடி மூன்றுதிங்கள்
கடந்தெடுத்தால்விளைந்திருக்குங்கற்பூரந்தான்
பூவெல்லாந்தானெடுத்து அண்டநீரில்
பொடித்திட்டுரவியில்வைக்கஉப்பேயாகும்
ஊவல்லோஆவுக்குஉயிருமாச்சு
உத்திபண்ணிப்பார்க்கவுங்கற்பூரமாமே (௯௯)
உப்பல்லோபிண்டத்தில்சேர்ந்தபோது
உடலுயிருமொன்றாகித்தண்ணீராச்சு
அப்பல்லோமுப்பூவுக்காணியாணி
அதைவிட்டால்கட்டாதுவழலைமார்க்கஞ்
செப்பல்லோபந்துக்குமூட்டலாச்சு
திட்சணமாயிந்தநூல்தெளிவோமெத்த
முப்பொருளுமொன்றாகிநின்றசோதி
மூலவட்டக்குருவருளால்மொழிதான்முற்றே( )

உரோமரிஷிசூத்திரம்-௱-முற்றும்.